அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

**அ.எண்:** 35 /2017
**தேதி:** 15.03.2017

## பெட்ரோல் டீசல் விலை உயர்வு

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

பெட்ரோல் மற்றும் டீசல் மீது மதிப்பு கூட்டு வரி விதிக்கப்பட்டு பெட்ரோலுக்கு ரூபாய் 3.78 ரூபாயும் டீசலுக்கு 1.7ரூபாயும் உயர்த்தப்பட்டது. அதற்கு சமத்துவ மக்கள் கட்சி வெளியிட்டிருந்த அறிக்கையில் கூறியிருப்பது போல் “சில நாட்கள் போராடிவிட்டு, மறுபடியும் நமது பணிகளுக்கு திரும்ப செல்கின்றோம்” என்பதற்கேற்ப அரசும் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல் அடுத்து வரும் வேறு பிரச்சனைகளுக்கு சென்றுவிட்டது.

பெட்ரோல், டீசல் விலையும் குறைக்கப்படவில்லை, அரசும் இந்த விலை உயர்வை கண்டுக்கொள்ளவில்லை.

எனவே, மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பெட்ரோல், டீசல் விலை உயர்வை திரும்ப பெறுவதற்கு தமிழக அரசு உடனே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டு கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்